பீப் சிஸ்டம்

* 5535—திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

அரசின் முக்கிய மருத்துவமனைகளில் அவசரக் காலங்களில் தேவைப்பட்ட மருத்துவர்களை உடனடியாக அழைக்க பீப் சிஸ் டம் (Beep System) கொண்டுவரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

இல்லை.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான அரசு பொது மருத்துவமனையில் கூட ஒரு வார்டில் சேர்க்கப்பட்டுள்ள வியாதியஸ்தரை அவசரமாகக் கவனிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், அந்த நேரத்தில் ட்யூட்டி டாக்டர் மருத்துவமனை வளாகத்திற்குள் வேறு எங்கே யாவது போயிருந்தால், வார்ட் பாய் அல்லது நர்ஸ் நேரில் சென்று அவரை அழைத்து வர வேண்டுமானால் ஒரு மணி நேரம் ஆகிவிடுகிறது. நான் இங்கே சொல்லியுள்ள பீப் கருவி இருந்தால் 5 நிமிடத்திற்குள் மருத்துவர் அங்கே திரும்பி வந்து நோயாளியின் உயிரைக் காப்பாற்றும் நிலை ஏற்படும். ஆகவே, இந்த முறைகளைக் கொண்டுவர அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப் பினருடைய கருத்து ஏற்கக் கூடிய ஒன்றாக இருந்தாலும், மேல் நாடுகளில்தான் இது போன்ற முறை பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவில், வேலூரில் இருக்கிற கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஒரு சில துறைகளில் இந்த முறை பின்பற்றப் படுகிறது. அது போல பம்பாய் போன்ற பெரிய நகரங்களில் தனியார் மருத்துவமனைகளில் இது பின்பற்றப்படுகிறது. ஆகவே, அரசினுடைய நிதிநிலைக்கு ஏற்ப மாண்புமிகு உறுப் பினருடைய கருத்தை அரசு பரிசீலிக்கும்.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, இப்படிப்பட்ட முறையைக் கொண்டு வர 2 அல்லது 3 இலட்சம் ரூபாய்தான் ஆகிறது. தனியார் மருத்துவ மனைகளில்தான் இப்போது இப்படிப்பட்ட வசதி இருக்கிறது. அது கூட இங்கே நம்முடைய மாநிலத்தில் சி.எம்.சி.யைத் தவிர வேறு எங்கும் இல்லை. இந்த அரசு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முயற்சியில் ஏழை எளிய மக்க ளுடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக, இருதய நோயாளிகளுக்கு

1990 ஏப்ரல் 24]

பை-பாஸ் சர்ஜரி செய்வதற்காக ஒரு கோடி ரூபாய் அவருடைய நிவாரண நிதியிலிருந்து ஒதுக்குகிறார்கள். அதுபோல சிறுநீரகத்திலிருந்து கற்களை அகற்றுவதற்காக, அறுவை சிகிச்சை இல்லாமல் செய்வதற்காக 2 கோடி ரூபாய் அவருடைய நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கி ஏழை எளிய மக்களுடைய உயிரைக் காப்பாற்றுவது பாராட்டத்தக்கது. ஆனால், இந்தக் கருவிகளை வாங்க 2 அல்லது 3 இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகாது. ஆகவே, அதே மாதிரியான வியாதியஸ்தர்களுடைய உயிரைக் காப்பாற்ற இந்த முறையைக் கொண்டு வர உடனடியாக இந்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

10—05 மணி

மாண்புமிகு டக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவரவர்களே, ஏழை மக்களுக்கு இலவசமாக வைத்திய வசதி செய்து கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, கலைஞர் அவர்கள் கொண்டு வந்துள்ள திட்டங்களை எல்லாம் சுட்டிக் காட்டினார்கள். இது அடிப்படைத் தேவை என்ற காரணத்தால், கலைஞர் அவர்கள் அதற்கு ஆணை இட்டிருக்கிறார்கள். தனியார் மருத்துவ மனைக்குச் சென்றால் 50,000 ரூபாய், 1 இலட்சம் ரூபாய் ஆகும். அரசு மருத்துவ மனையிலே செலவு இல்லாமல் செய்ய முடியும் என்ற அடிப்படையிலேதான் அந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ''பீப் சிஸ்டம்'' என்பது அதனுடைய அத்தியாவசியத்தைக் கருதி, நாளடைவில் படிப்படியாக உயர்த்தப்பட வேண்டிய ஒன்றுதான் என்ற அடிப்படையிலே அரசு உறுப்பினர் அவர்களுடைய கருத்தைப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

1—கர்நாடக அரசிடமிருந்து தமிழகம் பெற்ற நீரின் அளவு.

வினா எண். 43—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1976 முதல் 1988 ஆம் ஆண்டுகள் வரையில் தமிழ் நாட்டிற்கு கர்நாடக அரசிடமிருந்து கேட்டுப் பெற்ற தண்ணீரின் அளவு எவ்வளவு ?

(ஆ) தண்ணீருக்குப் பதிலாக தமிழ்நாடு அரசு மாற்றுப் பொருள் ஏதாவது கொடுத்துள்ளதா ?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS